1979 மார்ச் 14]

யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் வாங்கல்

* வினா எண் 384—திரு. தி. சு. நல்லதம்பி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) மீன்வளத் துறைக்காக, யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் பெருமளவில் வாங்க அரசு உத்தேசித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி மோட்டார்களின் செயல் திறனைப்பற்றி பரிட்சார்த்தமாக பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஜப்பானிலிருந்து 200 யமாகா அவுட்போர்டு மோட்டார்களை இறக்குமதி செய்ய தீர்மானித்திருக்கிறது.

(ஆ) தமிழ்நாட்டு கடற்கரைப் பகுதிகளான சென்னை, தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டப்பகுதியில், தமிழ்நாடு மீன் துறை கட்டுமரங்களில் யமாகா அவுட் போர்டு மோட்டார்களை இணைத்து ஒட்டி பரிசோதனை செய்தது. மீனவர்களுக்கும் இம்முறை மன நிறைவையும் அதிகமான மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. தி. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 200 யமாகா அவுட் போர்டு மோட்டார்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு தீர்மானித் திருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே சென்ற ஆண்டு ஜப்பானுக்குச் சென்று வாங்கி வந்ததாகவும் அது இந்தியத் துறைமுகத்தில் வந்தவுடனே, 3, 4 மோட்டார்கள் பழுதுபட்டு விட்டதாகவும் அதன் காரணமாக அதற்குச் செலவுகள் செய்யப் பட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேர்ப்பட்ட ஆதாரமற்ற தவறான செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையிலோ வெளியிலோ சொல்லாமல் இருப்பது அவருக்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது.

திரு. தி. சு. நல்லதம்பி: தலைவர் அவர்களே, நாட்டிற்கு நன்மை என்ற காரணத்தால் தான் இப்படிப்பட்ட மோட்டார்கள் வாங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதால் இதைவிட விலை மலிவாகவும் செயல் திறன் அதிகமாகவும் உள்ள மோட்டார்கள் இந்தியாவிலே தயாரிக்கப்படக்கூடிய நிலைமை

இருப்பதை நிர்வாகத்தினுடைய சம்பந்தப்பட்டவர்கள் இந்த அரசை அணுகி அதற்கு கொட்டேஷன்கள் தந்ததாக அறிகிறோம். அப்படி இருக்கும்போது ஏன் வெளிநாட்டிற்குச் சென்று வாங்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஜப்பானிலே தயாரிக்கப்படுகிற இந்த யமாகா அவுட் போர்டு மோட்டார்களைத் தயாரிக்கக்கூடியவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயும்த் பல்வேறு இடங்களிலே அவைகளைத் தயாரிக்கிறார்கள். அந்தத் தயாரிப்பாளர்களையெல்லாம் அழைத்து நானும் அதிகாரிகளும் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். ஆனால் அவர்கள் சொல்கிற விலை ஜப்பானிலே உற்பத்தி செய்யப்படுகிற யமாகா அவுட் போர்டு மோட்டார் எஞ்சின்கள் இங்கே இறக்குமதியாகின்ற கட்டத்திலே ஆகின்ற விலையை விட அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. இன்னொன்று, இந்தியத் துணைக் கண்டத்திலே தயாரிக்கப்படுகிற எஞ்சின்கள் பெட்ரோலால் ஓடுகிற எஞ்சின்களாக மட்டும் இருக்கின்றன. ஆனால் ஜப்பானிலே தயாரிக்கப்படுகிற எஞ்சின்கள் மண்ணெண்ணையினால் ஓடக்கூடிய என்சின்களாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருக்கு தெரியும், இப்போது உள்ள நிலையில் பெட்ரோலை வைத்து எஞ்சினை ஓட்டி மீன்பிடிப்பது அவர்களுக்குக் கட்டுபடியாகாது. ஆகவே மண்ணெண்ணையை வைத்து எஞ்சினை ஓட்டி மீன் பிடிப்பது தான் அவர்களுக்கு எளிதாக இருக்கும். இந்த இரண்டு காரணங்களால் பரீட்சார்த்தமாக, டிரயிலாக, எக்ஸ்பெரிமண்டலாக, செய்ய வேண்டுமென்ற அளவிலே ஜப்பானிலேயிருந்து 200 என்சின்களைத் தருவிக்க அரசு முடிவு செய்து மத்திய அரசிடம் அனுமதி கேட்டு அவர்கள் 200 எஞ்சின்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அளித்திருக்கிறார்கள். அதற்கான அன்னியச் செலவாவணியையும் அனுமதித்து இருக்கிறார்கள். முதலிலே எக்ஸ்பெரிமண்டலாக, பார்த்து விடுவதற்காக, 10 என்சின்களை மட்டும் இறக்குமதி செய்வதற்காக இந்த அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இந்த மீன் வளத் துறைக்கு யமாகா அவுட்போர்டு மோட்டார்கள் வாங்குவது எங்கு எங்கு பயன்படுத்தப்படுவதற்காக? கடலிலே மட்டும் பயன் படுத்தும் சாதனமா அல்லது பெரிய அணைக்கட்டுப் பகுதிகளிலேயும் பயன்படுத்தமுடியுமா?

மாண்புமிகு திரு.க. உரொ.எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த யமாகா அவுட் போர்டு மோட்டார் என்சின்கள் மீன் பிடிப்பதற்காகத் தண்ணீரிலே ஓடுகின்ற எந்தப் படகிலேயும் பொருத்துவதற்குப் பொருத்தமாக இருக்கும்.

1979 மார்ச் 14]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஜப்பானிலே வாங்கப்படுகிற எஞ்சினின் விலை என்ன? அதே போன்று இந்தியாவிலே அவர்கள் சொல்கிற விலை என்ன? இந்தியாவிலே தயாரிக்கப்படுகிற எஞ்சினை வாங்கிப் பரீட்சார்த்த மாகப் பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட உத்திரவிடப்பட்டிருக்கிற 200 எஞ்சின்களின் விலை அன்னியச் செலாவணி ரூபாய் 11 இலட்சத்து 5,802. அதாவது ஒரு இலட்சத்து 29,600 அமெரிக்கன் டாலர்கள். இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு எஞ்சினுக்கு, துறைமுகத்திலே இறக்குமதியாகும்பொழுது நமக்கு ஏற்படும் விலை ஏறக்குறைய ஐயாயிரத்து ஐநூறு (5,500) ரூபாய்க்கு அருகில் வருகிறது. இங்கே தயாரிக்கப்படுகின்ற எஞ்சின்களின் விலையெல்லாம் இதைவிடக் கூடுதலாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நான் ஏற்கனவே சொன்னதைப்போல நம்முடைய மீனவர்களுக்குப் பொருத்தமானது மண்ணெண்ணெயால் ஓடுவதுதான் பொருத்தமாக இருக்கும். பெட்ரோலால் ஓடும் என்சின்கள் பொருத்தமாக வராது. இப்பொழுதே நான்கு ரூபாய் விற்கிறது. அதைக் கணக்கில் வைத்துதான் இந்த எஞ்சின்களை வாங்குவது என்று இப்பொழுது அரசு முடிவு செய்தது.

விவசாயப் பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிப்பு,

* வினா எண் 385—திரு. துரை முருகன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே, விவசாய பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் சாதக பாதகங்களை மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவித்ததா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே விவசாயி விளை பொருட்களுக்கு கொள்முதல் விலை அறிவிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் இவ்வாறு செய்யப்படுமென்று மந்திய அரசு இப்பொழுது அறிவித்துள்ளது.